## பெப்ரவரி – 16 – வெள்ளி

**புனித ஒனேசிமுஸ்**

**ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்: திபா. 51:3**

### முதல் வாசகம் : ஏசாயா 58 : 1 –9

பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்திவிடாதே் எக்காளம் முழங்குவது போல் உன் குரலை உயர்த்து் என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு.அவர்கள், நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம்போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள் என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள் நேர்மையான நீதித்தீர்ப்புகளை என்னிடம் வேண்டுகின்றார்கள் கடவுளை அணுகிவர விழைகின்றார்கள். நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்கிறார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள் உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள்.இதோ, வழக்காடவும், வீண்சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்?கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு!பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு!அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் உன் நேர்மை உனக்கு முன்செல்லும் ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும்.அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் ”இதோ! நான்” என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிடு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிடு.

**பதில்பாடல் :** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை

### நற்செய்தி : மத்தேயு 9 : 14 – 15

அக்காலத்தில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, ”நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?” என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.

**தியானம்:** இந்த உலகிலே பாவிகளைஅதிகமாகநேசிக்கக் கூடியவர் ஒருவர் இருக்கின்றார் என்றால் அது இறைமகன் இயேசு மாத்திரமே. “மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா?” (மத்தேயு9:15) எனப்படும் நற்செய்தி வார்த்தைகள் மிகவும் கடினமானவை. அதேவேளையில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் எம்மால் புரிந்துகொள்ள, நம்பமுடியாத ஆழமான அர்த்தமுள்ளவார்த்தைகள் என்று கூடக் கூறலாம். இன்றைய நற்செய்தியை நாம் விளங்கிக் கொள்வதாயின் அதன் முன்பகுதியை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இறைமகன் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் “நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்கவந்தேன்” (மத்தேயு9:13) என்றதோடு நின்று விடவில்லை. மாறாக கூறியதை அவர் வாழ்ந்துகாட்டினார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தகாலத்தில் விபச்சாரம் செய்வோரோடு, வரி அறவிடுவோரோடு, சமுதாயத்தில் மதிப்பற்றவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு சமபந்தி போசனம் செய்து அன்பாக, பாசமாகப் பழகினவர். அதனாலேயே பாவிகளான நாங்கள் மனம் திரும்பி அவரைப் பின்பற்றி வாழும் போது எம்மை தமது மணவிருந்தினர்கள் என அன்போடு அழைக்கின்றார்.ஆயினும் கிறிஸ்தவர்கள் எனஅழைக்கும் எம்மத்தியில் இன்று நடப்பதென்ன? வயிற்றுப் பிழைப்புக்காக நாம் செய்யும் தொழில்களின் பெயரால் எமக்குள்ளே எத்தனை வேறுபாடுகள், பிளவுகள் ஏற்படுத்தியுள்ளோம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனவும் பெரியவன், சிறியவன் எனவும் பாகுபாடு காட்டுகிறோம். இப்படிப்பட்ட நேர்மையாளர்களை அன்றைய கிறிஸ்து மட்டுமல்ல இன்றைய கிறிஸ்துவும் வெறுக்கின்றார். ஏனெனில் நான் கிறிஸ்தவன் என்று சொல்வது சுலபம் ஆனால் கிறிஸ்தவனாக வாழுவது கடினம். அதனாலேயே கிறிஸ்துவும் “நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. பலியையல்ல, இரக்கத்தையேவிரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள்” என இன்றைய நற்செய்தியின் முன்பகுதியில் கூறியுள்ளார். எனவே இறைமகன் இயேசுவின் போதனையின் அர்த்தத்தை நாங்களும் கற்றுக்கொண்டு புதுவாழ்வு வாழுவோம்.